

## கோலாலம்பூர் - சிலாங்கூர் எல்லைப் பிரச்சினை:

# நடப்பில் உள்ள சிக்கல்களுக்கு இடையில் சுமுகமாக தீர்க்கப்படும்

கோலாலம்பூர், பிப். 7-

கோலாலம்பூர் - சிலாங்கூர் எல்லை விவகாரம் 2025 ஆம் ஆண்டுக்குள் தீர்க்கப்பட்டு விடும் என்று சிலாங்கூர் மந்திரி பெசார் அமிருடின் ஷாரி கூறினார்.

கோம்பாக், அம்பாங், உலு லங்காட் போன்ற பகுதிகள் உட்பட 19 இடங்களின் எல்லைப் பிரச்சினை பேசப்பட்டு விட்டது. இன்னும் பல இடங்களின் எல்லைப் பிரச்சினை பேசப்படும் என்றார் அவர்.

இந்த இரு மாநில எல்லைப் பிரச்சினைகள் கொஞ்சம் சிக்கலானவை. சொத்துடைமை வரி மற்றும் பொது இடங்களை பராமரிப்பது உட்பட பல பிரச்சினைகள் இதில் சார்ந்திருக்கின்றன என்றார் அவர்.

குறிப்பாக கோலாலம்பூர் மாநகர மன்றத்தின் கீழ் அதன் வரிக்கு உட்படுகின்ற இடங்களும் சிலாங்கூர் மாநில நகராண்மைக்கழகத்தின் கீழ் இடம் பெற்றிருக்கின்ற இடங்களும் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

இதில் ஒரு தெளிவான எல்லை வகுப்பது அவ்வளவு எளிதல்ல என்று நேற்று கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபாவுடன் சந்திப்பு நடத்திய பின்னர் அவர்களுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் பேசினார்.

நடைமுறைக்கு சாத்தியமான விஷயங்களை இதில் கவனிக்க வேண்டும். ஒரு வீட்டை இரண்டாக பிரிக்க முடியாது என்பது போல இரு மாநில எல்லையில் எதையும் விரைந்து செய்து விட முடியாது. இரண்டு மாநில அதிகாரங்களுக்கு கட்டுப்பட்டு மக்களிடமிருந்து வரிகளை வசூலிக்க முடியாது.

மேலும் பல வணிகத்தலங்களும் தனியார் இடங்களும் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்றும் அவர் கூறினார். கோலாலம்பூர் - சிலாங்கூருக்கு இடையில் நிலவும் எல்லைப் பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்படும் என கடந்த ஜனவரி 9 ஆம் தேதி அமைச்சர் ஸலிஹா குறிப்பிட்டிருந்தார்.

கடந்தாண்டு பேசிய பெட்டாலிங் ஜெயா எம்பி லீ சியா சங் கோலாலம்பூரை மீண்டும் சிலாங்கூரிடமே ஒப்படைத்து ஒரு பெருநகராக சிலாங்கூரை மாற்ற வேண்டும் என்பதை கேட்டுக் கொண்டிருந்தார்.

இதன் மூலம் அதன் நகர திட்ட அமைப்பு மற்றும் அதன் கட்டடமைப்பு வசதிகளை சிறப்பாக வடிவமைக்க முடியும். கடந்த 1974 ஆம் ஆண்டு சிலாங்கூரிலிருந்து 200 சதுர கிலோ மீட்டருக்கும் அதிகமான ஒரு பகுதியை கூட்டரசுப் பிரதேசமாக பிரகடனம் செய்து சிலாங்கூரிலிருந்து அது பிரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.